மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை முழுவதுமாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனாலும் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. அவையிலே ஒரு நாளிலே ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒத்திவைப்புத் தீர்மானம் வராத நாளே கிடையாது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் திரும்பவும் பரிசீலிக்கிறேன். அதனை எடுத்துக் கொள்வதற்கு முயற்சி செய்கிறேன்.

3. ஒழுங்குப் பிரச்சினை

பேரவைக் கூட்டம் நடைபெறுகையில் நீதி விசாரணை குறித்து பேரவையில் அறிவிக்காது வெளியில் அறிவிப்பது—தொடர்ச்சி.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, நேற்றைய தினம் எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சித்தன் அவர்கள் இங்கே ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள். முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரியிலே நீதி விசாரணை சம்பந்தமாக அறிவித்திருக்கிறார்கள். எங்கள் உறுப்பினர் இது பற்றி எழுப்பிய போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அது சம்பந்தமான அறிக்கை இந்த அவையிலே தாக்கல் செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆகவே முதலமைச்சர் அவர்கள் இது குறித்து வெளியே அறிவித்தது இந்த அவையை அவமதிக்கும் செயலாக நான் கருதுகிறேன். ஆகவே முதல் முறையாகக் கூடுகின்ற நேரத்திலேயாவது அறிவித்திருக்க வேண்டும். அந்த அறிவிப்பிற்குப் பிறகு இன்றைக்கு இரண்டாவது நாள் கூட்டமாகும் இப்போதும் கூட இந்த அவையிலே எந்தவிதமான தகவலும் தரப்படவில்லை. ஆகவே இது அவையினுடைய உரிமையினை மீறிய செயலாக இருக்கின்றது. எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் அது சம்பந்தமாக அறிக்கை வெளியிடப்படுகின்ற நேரத்திலே உடனே அது குறித்து அவையிலே அறிவிக்க வேண்டும், இல்லை என்றால் அது கூட உரிமை மீறல் பிரச்சினையாகும் என்பதை கடந்த காலங்களிலே நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இந்த அவைக்கு அந்த அறிக்கை சம்பந்தமாக நீதி விசாரணை சம்பந்தமாக ஏதேனும் அறிக்கை கொடுக்கப் போகிறீர்களா, இல்லையா என்பதுதான்.

1982 மார்ச் 16]

(முற்பகல் 10-20.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இப் பிரச்சினையை எழுப்பினார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் ஹாஜா ஷெரீப் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும் எழுப்பினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றைக்குத்தான் சென்னைக்கே வர முடிந்தது— (குறுக்கீடு). ஆமாம்—இன்று காலையில் தான் வருகிறார்கள். ஆகையினால் முழு விவரங்களும் வந்த பிறகு, அவைகளை இந்த அவைக்கு தந்து, பிறகு அதை விவாதத்திற்கு வைத்துக் கொள்ளலாம் என்று நேற்றே சொன்னேன். எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள். ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் அப்போது இல்லையோ என்னவோ. (குறுக்கீடு.) இன்றைக்கு அந்த விவரங்கள் அவையில் வைக்கப்படும் என்று சொல்லவில்லை, முழுவிவரங்களும் கிடைத்தவுடன் வைக்கப்படும் என்று சொன்னேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே வந்து விட்டார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மிக முக்கியமான விஷயம் கன்னியாகுமரி மாவட்டத்தில் பதட்ட நிலை நிலவுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம், மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் உடனடியாக இங்கு இந்த அவைக்கு வந்து, தேவையான நடவடிக்கைகளை ஏன் எடுக்கவில்லை .... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல்வர் நேற்று வரவில்லை. காலையில் வருவதாகத்தான் செய்தி.

Dr. K. SOURIRAJAN: Whenever a privilege issue is raised on the floor of the House, it precedes all other business before the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை மீறல் தான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். என்னைப் பேச விட்டால் தானே கொஞ்சம் பொறுமையாக இருங்கள்.